<u>குற்றவியல் நீதித்துறை நடுவர் நீதிமன்றம் எண்.1,</u>
<u>ஜெயங்கொண்டம்.</u>
<u>CC.No. 87/2018</u>

2026ம் ஆண்டு ஜுன் மாதம் 01ஆம் நாள் திங்கள் கிழமை அரசு தரப்பு சாட்சி–05, திரு.மணிகண்டன் என்பவரின் வாக்குமூலம் (1969ம் ஆண்டின் 56வது விதியின் பிரிவின் ஏற்பாட்டின்படி) திரு.கோவிந்தராஜ், மூன்றாம் நிலை எழுத்தர் அவர்களால் ஆணையிட்டு உறுதிமொழி செய்விக்கப்பட்டு சத்தியப்பிரமாணம் செய்து வைக்கப்படுகிறது.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | திரு.மணிகண்டன் | வயது | : | 38/26 |
| த.பெ/ க.பெ. | : | இளங்கோவன் | தொழில் | : | விவசாயம் |
| ஊர் | : | வாழைக்குறிச்சி | நிலை | : | LW06 / PW05 |
| வட்டம் | : | | நாட்டினம் | : | இந்தியன் |
| மாவட்டம் | | | | | |

(எதிரி ஆஜர் )

<u>முதல்விசாரணை:</u>

நான் வாழைக்குறிச்சியில் வசித்து, விவசாயம் செய்து வருகிறேன். 2014ம் வருடம் ஒரு நாள், தேதி மாதம் நினைவில்லை, வாழைக்குறிச்சியில் உள்ள கோவிந்தம்மாள் வீட்டின் அருகில் நானும், கிருஷ்ணமூர்த்தி மகன் ராஜூவும் பேசிக்கொண்டிருந்தபோது, தா.பழூர் போலீசார் வந்து, முந்தைய நாள் வடிவேலுக்கும் கோவிந்தம்மாளுக்கும் நடந்த சண்டை தொடர்பாக சம்பவ இடத்தை பார்வையிட்டு, மாதிரி வரைபடம் மற்றும் பார்வை மகசர் தயார் செய்தார்கள். அதில் நானும்

ராஜூவும் சாட்சிகளாக கையொப்பம் செய்தோம். என்னிடம் தற்போது நீதிமன்றத்தில் காட்டப்படும் பார்வை மகசரில் உள்ள இரண்டாவது சாட்சி கையொப்பம் என்னுடையதுதான். அது அ.த.சா.ஆ. 2 ஆக குறியீடு செய்யப்படுகிறது.போலீசார் என்னை விசாரணை செய்தார்கள்.

எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை

அ.சா.1 கோவிந்தம்மாள் எனது அத்தை ஆவார். இந்த வழக்கு சம்பவம் குறித்து தெரியுமா என்றால் தெரியாது. நான் எந்த இடத்தில் வைத்து கையொப்பம் செய்தேன் என்றால் கோவிந்தம்மாள் வீட்டின் அருகில் வைத்து செய்தேன். அதில் என்ன எழுதியிருந்தது என்று படித்து பார்த்தேனா என்றால் படித்து பார்த்தேன். அது எழுதிய பேப்பரா, தட்டச்சு செய்யப்பட்ட பேப்பரா என்றால் எழுதிய பேப்பர். அ.சா.1 எனது அத்தை என்பதால் நான் காவல் நிலையத்தில் வைத்து கையொப்பம் செய்துவிட்டு, தற்போது சம்பவ இடத்தில் வைத்து கையொப்பம் செய்ததாக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

/ உண்மை நகல்/
ஒம்/–P.கனிமொழி,
குற்றவியல் நீதித்துறை நடுவர் எண்1,
ஜெயங்கொண்டம்.